REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'துப்பறியும்' நாயை பிடிக்க போலீஸ் படையெடுப்பு

இந்தோ-நேபாள எல்லையில் உள்ள பெலாட்ரியா என்னுமிடத்தில், ஒரு பேர்போன குற்றவாளியின் குகையினுள் ஒளிந்துகொண்டிருந்த நாய் ஒன்றைப் பிடிக்க போலீசார், தங்களின் முழு பலத்தையும் செலவிட வேண்டியிருந்ததாம்.

போலீசாரிடம் சிக்கிக்கொள்ளாமல் தப்பித்துக்கொள்ள தன் எஜமானருக்கு எத்தனையோ முறை அந்த நாய் உதவியிருக்கிறதாம்.

கொள்ளைக்கூட்டத்தின் துப்பறிபவனாக இந்த நாய் இருந்துகொண்டு, போலீசாரின் நடவடிக்கைகளை முன்கூட்டியே அவர்களுக்குத் தெரிவித்துவிடுமாம்; அவர்களும் தப்பிவிடுவாராம்!

இப்போது, அந்த நாயைப் பழக்கப்படுத்தி வைத்திருந்த அந்த குற்றவாளியுடன் நாயும் சேர்த்து கைதுசெய்யப்பட்டுள்ளதாம்.

மலர் 3] சென்னை: ஆனி 22உ வியாழன் (7—7—55) ★ ★ வெளியூர்: ஆனி 24உ வெள்ளி (8—7—55) [இதழ் 20

கல்லூரி போதனு மொழிப் பிரச்சினை

'ஆங்கிலமா—தமிழா?' என்பதில் சிக்கல்

துணைவேந்தர் இலட்சுமணசாமி அவர்களின் அச்சமும்-அறிவுரையும்

"கல்லூரிப் படிப்புக்கும், பள்ளிப் படிப்புக்கும் வேற்றுமை இருக்கிறது; பள்ளிக்கூடங்களில் போதிப்பதற்குத் திறமையான ஆசிரியர் இருப்பதே போதுமானது; புதிய பாடப் புத்தகங்களுக்கு அவசியமில்லை; ஆனுல் கல்லூரிக் கல்வித் துறையிலோ, கட்டுச் சோறு ஊட்டாமல், உலக இலக்கியங்களின் காற்று வாயிலை மாணவர்களுக்குத் திறந்துவிடுவது ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கப்படுகிறது. பிற மொழிகளிலிருந்து நூற்களை மொழிபெயர்ப்பது அதற்குப் போதியதாகாது. இக்கோணத்திலிருந்துதான், நான், கல்லூரி போதனு மொழிப் பிரச்சினையை நோக்குகிறேன்."

"வட்டார மொழிதான் தக்க போதனு மொழியாக இருக்க வேண்டுமென்ற அறிவிப்பில், எந்தவிதக் கருத்து வேறுபாடும் எனக்குக் கிடையாது. ஆனுல் இருந்துவரும் இடுக்கணே, குறிப்பிட்ட ஒரு துறையில் கிடைக்கும் நூற்கள் தேவையை நிரப்புவதாக இல்லாததேயாகும்."

"எனவே, இந்தியப் பேரரசால் 1947-ஆம் ஆண்டில் கூட்டப்பட்டதும், சிறந்த கல்வி நிபுணர்களான சி. வி. ராமன், கோஷ் போன்றவர்களை உறுப்பினர்களாகக் கொண்டதும், என்னைக் கூட்டுவிப்பவனுகவும் கொண்டதுமான அக்குழு, விஞ்ஞானம், சட்டம் போன்ற இயல்களில் உலகம் முழுதும் வழக்கில் இருந்துவரும் கலைச் சொற்களை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அக்கலைச் சொற்களைப் பயன்படுத்தி பாட நூற்கள் இயற்றுவதற்கு சிறந்த விஞ்ஞானிகளையும் மற்றவர்களையும் வேண்டிக்கொள்ள வேண்டும் என்றும் முடிவு கூறியது. அத்தகைய நூற்களுக்கு சிறப்புடைய விஞ்ஞானிகளே ஆசிரியர்களாக இருப்பார்களானுல், அது வரவேற்கத்தக்கதேயாகும் என நானும் கருதினேன். இம்முறை, பல்வேறுபட்ட நூற்களையும் கற்பதற்கு மாணவர்களுக்குத் துணை செய்யும்."

"வட்டார மொழிகள் அனைத்திலும் பாட நூற்களை இயற்றுவதற்கு, மத்திய-மாநில அரசாங்கங்கள் ஊக்கமும், ஆக்கமும் காட்ட வேண்டும்."

"இந்த நிபந்தனை ஒப்புக்கொள்ளப்படும் பட்சத்தில் வட்டார மொழியை போதனு மொழியாக ஒப்புக்கொள்ளலாம்."

—இவ்வாறு, போதனு மொழிபற்றி ஆராயக் கூடியிருந்த ரோடரி சங்கத்தில், சென்னை பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஆ. இலட்சுமணசாமி அவர்கள் கூறியுள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

இரண்டாம் திட்டமும் அப்படித்தானு?

பல கோடி ரூபாய் திட்டங்கள் அங்கே-சில இலட்ச ரூபாய் திட்டங்கள் இங்கே!

உர உற்பத்தித் தொழிற்சாலைகள் வடநாட்டில்... கொசு மருந்து தொழிற்சாலை தென்னுட்டில்!

புதுடில்லி, ஜூலை 6—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்படி, பொதுத் துறையில் (அரசாங்கத் துறையில்) தொழில் அபிவிருத்திக்கான ஏற்பாடுகள் பல இருக்கின்றன என்று தெரியவருகிறது.

மேலும் இரண்டு அல்லது மூன்று உற்பத்தித் தொழிற்சாலைகள், இரண்டாவது டி. டி. டி. தொழிற்சாலை, கனரக மின்சார இயந்திர சாதனங்கள் உற்பத்திக்காக ஒரு தொழிற்சாலை, கலவை எண்ணெய் உற்பத்திக்கான தொழிற்சாலை முதலியவைகளைத் துவங்குவதும் திட்டத்தில் உள்ளடங்கியிருக்குமாம்.

இந்தத் தொழிற்சாலைகளில், சுமார் ரூ. 75 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்படுகிற டி. டி. டி. உற்பத்தித் தொழிற்சாலை மட்டுமே, தென்னுட்டில்—திரு-கொச்சியில் அமையுமாம். இதர தொழில்கள் எல்லாம் ரூ. 64 கோடி செலவில் மதிப்பிடப்படுகிற உர உற்பத்தித் தொழிற்சாலைகள் முதலியன எல்லாம் வடநாட்டிலேயே அமைக்க முடிவெடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

மற்றும், ஏற்கனவே உருவாகி உற்பத்தியைத் துவங்கியுள்ள பல தொழிற்சாலைகளும், கோடிக்கணக்கான ரூபாய் செலவில் விரிவாக்கப்படவிருக்கின்றனவாம்.

மேற்கு வங்கத்தில் உள்ள ரூப்நாராயணன்பூர் எனுமிடத்திலிருக்கும், 'டெலிபோன் கேபின்' உற்பத்தித் தொழிற்சாலை,

(4-ம் பக்கம் பார்க்கவும்)

ரூ. 400 கோடிசெலவில்

இரண்டாவது ஐந்தாண்டு திட்ட மின்சார உற்பத்தி பெருக்கம்

இந்திய சர்க்கார் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாட்டிலுள்ள மின்சார உற்பத்தியைப் பெருக்க ரூ. 400 கோடி செலவிடப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

தயாராயிருக்கிறதாம்!

இந்திய சர்க்காரின் பல்வேறு துறைகளுக்கும் தேவையான தொழில் நுட்பத் தேவைகளையும், நிபுணர்களையும், இதர தகவல்களையும் தந்துதவ சோவியத் ரஷ்யா விருப்பம் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

உணவுப் பண்டங்களுக்கு விற்பனை வரி விதிப்பிலிருந்து விலக்கு

இட்லி, தோசைக்குக் கிடையாதாம்! பூரி, சப்பாத்திக்கு உண்டாம்!!

புதுடில்லி, ஜூலை 24—

விற்பனை வரி விதிப்பிலிருந்து விலக்களிப்பதற்காக, 'ரொட்டி' என்ற சொல்லுக்குள் அடங்கும் பொருள்களுக்கு சர்க்கார் விரிவான விளக்கம் தந்திருக்கின்றனராம்.

கோதுமை, சோளம், பச்சைப் பயிறு முதலிய தானியங்களின் மாவைக்கொண்டு காடி சேர்த்தோ, சேர்க்காமலோ தயாரிக்கப்படும் உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

இரட்டை ரொட்டிக்கு மட்டுமின்றி மக்கள் பெருவாரியாக உபயோகிக்கிற சாதாரண ரொட்டி, சப்பாத்தி, பூரி, 'குல்சாஸ்' முதலிய வகை உணவுப் பண்டங்களுக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டும் என்று டெல்லி மாநில விற்பனை வரி கமிஷனரான தலீப்சிங் என்பார் கூறியிருக்கிறார்;

ஆனுல், தோசை, இட்லி, மற்றும் கச்சோரி, பிதிவாலி, பூரி, பருப்பு பாரரிதா முதலிய பொருள்கள்—அதாவது, கோதுமை, அரிசி முதலிய மாவுகளுடன் உருளைக்கிழங்கு கீரை, காய்கறி, பயிறு முதலியவைகளை ருசிக்காகச் சேர்த்துக்கொண்டு தயாரிக்கும் பொருள்களுக்கு இந்த விதிவிலக்கு கிடையாதாம்!

சவூதி அரேபியாவின் மன்னர் இபின் சவூத், இந்தியக் குடியரசுத் தலைவர் ஜாசேந்திரரின் அழைப்பிற்கிணங்க இந்தியாவிற்கு வருகை தருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

பஞ்சாப் சர்க்கார் அச்சம்

அமிருதசரஸ் நகரைச் சுற்றிலும் போலீஸ் காவல்

அகாலிதளத்தலரின் பஞ்சாப் மொழிவழி மாநிலக் கிளர்ச்சியையொட்டி, வெளியிடங்களிலிருந்து அகாலி தொண்டர்கள் யாரும் வராமல் தடுப்பதற்காக அமிருதசரஸ் நகரைச் சுற்றிலும் போலீஸ் காவல் நிறுத்தப்பட்டுள்ளதாம்.

'இராஜினுமா செய்க!'

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபைக்குப் புதிய தேர்தல் நடைபெற்றிருப்பதால் முகமது அலி மந்திரி சபை இராஜினுமா செய்ய வேண்டும் என்று சுகரவர்த்தி தலைமையில் உள்ள அகில பாகிஸ்தான் ஜின்னு அவாமி லீக் கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டம் ஒன்றில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாம்.

ரஷ்யாவின் நீர்மூழ்கிக் கப்பல்கள்

சோவியத் ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பல்கள் (சப்மரீன்கள்) எண்ணிக்கை வர வர தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே வருகிறது என்றும், ரஷ்ய இராணுவத்திற்குப் புதிய புதிய சாதனங்கள் தயாரிக்கப்படுவதாகவும் பிரிட்டன் பாதுகாப்பு இலாகா அமைச்சர் செல்வின் லாயிட், பிரிட்டன் மக்கள் சபையில் கூறியிருக்கிறார்.

கருணை மனு போட்டிருக்கிறாராம்!

'கடாட்சம்' கிடைக்குமா?

நெல்லை, ஜூலை 6—

"இங்கு கடற்கரைப் பகுதியில் கிடைக்கும் மூலப் பொருட்களைக் கொண்டு கனரகத் தொழிற்சாலை ஒன்றை அமைக்குமாறு மத்திய சர்க்காருக்குச் 'சிபாரிசு' செய்திருக்கிறேன். மூன்று முதல் நான்கு கோடி ரூபாய் வரையிலும் விடுமுதல் போடக்கூடிய முதலாளிகள் விரைவிலேயே இதுபற்றி ஆராய்வர். அவர்களுடன் மக்கள் ஒத்துழைத்து பலருக்கு வேலை தரக்கூடிய அத்தொழிற்சாலையை ஆரம்பிக்க, உதவ வேண்டும்,"

என்று, மாநில முதலமைச்சர் காமராசர், நெல்லையையடுத்த ஆறுமுகனேரியில், கிராமாந்திர இணைப்பு நீர் வினியோகத் திட்டமொன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தி தேசீய மொழியா? ஆட்சி மொழியா?

'சிலரின் புனித விருப்பமே தேசீய மொழி எனக் கூறச் செய்கிறது'

'ஆட்சி மொழிதான் இந்தி' என்கிறார் அமைச்சர் சுப்பிரமணியம்

"இந்தியாவின் தேசீய மொழியாக இந்தி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகச் சில செல்வாக்கு படைத்தவர்கள்கூட கூறிவருகின்றனர்; அந்தக் கூற்றில் உண்மை இல்லை."

"யூனியன் ஆட்சி மொழியாக இந்தி ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது என்றுதான் அரசியல் சட்டம் குறிப்பிடுகிறது. இந்தி உள்ளிட்டு 14 மொழிகளை தேசீய மொழிகளென அதே சட்டம் ஒப்புக் கொண்டிருக்கிறது."

"இந்தியை தேசீய மொழி எனப் பன்னிப் பன்னிக் கூறி வருகிறவர்கள், தங்கள் புனிதமான விருப்பத்தைக் கூறுவதாக இருக்கலாம்!"

"தங்களுடைய சொந்த மொழியை வளப்படுத்துவதில் மக்களுக்கு முழு உரிமை இருந்தால்தான், இந்தி ஆதிக்கம் பற்றிய அச்சம் அகல முடியும்."

—இக்கருத்தை, ரோட்டரி சங்கக் கூட்டத்தில் கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் கூறியுள்ளார்.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 7—7—'55 வியாழன்

'குற்றாலக் குறவஞ்சி'

குற்றாலத்தில் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் குழு, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிர்மாணிக்க இருக்கும் கனரகத் தொழில்கள் குறித்தும், அடிப்படைத் தொழில்கள் குறித்தும், தனது கருத்தை ஒளிவு மறைவு இல்லாமல் வலியுறுத்திக் கூறியிருக்கிறது.

அவைகளில் சிலவற்றைத் தமிழ்நாட்டில் நிறுவுமாறு இந்தியப் பேரரசை சென்னை அரசாங்கம் வலியுறுத்த வேண்டுமெனும் தனது உள்ளக்கிடக்கையை காங்கிரஸ் குழு தீர்மானமாக்கி இருக்கிறது.

அதுவுமன்றி, தமிழ் நாட்டில் மின்சாரத்தைப் பெருக்க வேண்டியதின் அவசியத்தைக் குறித்தும் குற்றாலக் கூட்டம் உணர்ந்திருக்கிறது. அத்தொடர்பில், நெய்வேலி தொழில் ஏற்பாட்டைத் துரிதமாக முடிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் குற்றாலம் வெளியிட்டிருக்கிறது.

குற்றாலக் கூட்டத்தின் சிறப்பே, மேற்குறிப்பிட்டுள்ள தீர்மானத்தை ஒட்டியுள்ளதாகும். அத்தீர்மானத்தை சென்னை அரசாங்கத் தொழில் அமைச்சர் கனம் பக்தவத்சலனார் முன்மொழிய, இந்தியப் பேரரசின் உருக்கு, தொழில், வர்த்தக அமைச்சர் கனம் டி. டி. கிருஷ்ணன்—இல்லை—(அவர்தான் வாலை வெட்டிக் கொள்ளவில்லை என மறுத்து விட்டாரே!) கிருஷ்ணமாச்சாரியார் பின்மொழிய, பலர் வழிமொழிந்த பின்னரே, நிறைவேறி இருக்கிறது!

குற்றாலக் காங்கிரஸ்குழுவின் தொழில் தீர்மானம், அதற்குரிய மரியாதையுடன் இந்தியப் பேரரசால் கருதப்படுமா என்பது ஐயத்திற்குரியதேயாகும். அதுவுமன்றி, குற்றாலக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு செயலாற்ற வேண்டும் என இந்தியப் பேரரசை இடித்துக்கூறும் நெஞ்சுரம் சென்னை காங்கிரஸ் அமைச்சர் குழுவிற்கு, இயல்பாக இல்லையானாலும், நெருக்கடியின் காரணமாகவாவது ஏற்படுமா என்பதும் ஐயத்திற்குரியதேயாகும்.

தொழில் தீர்மானத்தை பின்மொழிந்து பேசிய உருக்கமைச்சர் கனம் கிருஷ்ணமாச்சாரியார், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தெற்கு அலட்சியப்படுத்தப்பட்டுவிட்டது என்று இங்கு தாராளமாகப் பேசிக்கொள்ளப்படுவதாகவும், இப்படி ஒரு பொதுக் கருத்து பரவலாக இருந்து வருவதாகவும், இக்கருத்தைக் காங்கிரசை எதிர்க்கும் மக்களும், சக்தியும் புனைந்துவிட்டிருப்பதாகவும், நிலைமையை விளக்கி இருக்கிறார்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு, இந்தியப் பேரரசால் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையை விளக்க, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் செலவினப் புள்ளி விவரங்களே போதிய சான்றுகளாகும். தொழில் துறையில் தென்னாட்டிற்குரிய பங்கை ஒதுக்க மறுத்து, தென்னாட்டை இந்தியப் பேரரசு வஞ்சித்திருக்கிறது எனப் பரவலாக இருந்து வரும் குற்றச்சாட்டு,—அதை எவர் எவர் கூறுவதாக இருந்தபோதிலும்—, அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார் கூறுவதுபோல, வெறும் புனைந்துரை அல்ல.

அனுபவித்த—அனுபவித்துக் கொண்டுவரும்—முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் நடைமுறை சம்பவங்களைக் கொண்டு கூறப்படும் உண்மையேயாகும். நூற்றுக்கு நூறும் உண்மை என்பதைத் தவிர, அது வேறு ஒன்றுமில்லை.

தென்னாடு அலட்சியப்படுத்தப்பட்டிருக்கிறது என, முதல் ஐந்தாண்டு திட்டம் பற்றி எழுந்துள்ள கருத்தை, இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின்பால் ஏற்பட்டுள்ளதாக மேற்படி அமைச்சர் அறிவிக்கிறார்.

வாய் தவறுதலாக அமைச்சர் அவ்வாறு கூறி இருப்பார் என நாம் கொள்வதற்கில்லை. முதல் திட்டத்தைப் போலவே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் தென்னாட்டிற்குப் பட்டை நாமமே தீட்டப்பட இருப்பதை, இந்தியப் பேரரசின் அமைச்சர் உணர்ந்திருப்பதாலேயே, அவ்வாறு கூறியிருக்கவேண்டும் என்றே நாம் யூகிக்கிறோம்.

தொழில் நிர்மாணத் துறையில் தெற்கு புறக்கணிக்கப்பட்டு வருவதற்குரிய காரணத்தை, இந்தியப் பேரரசின் நல்லெண்ணத்தில் தேடுவதை விட, வேறு இடத்தில் ஆராய வேண்டும் என அமைச்சர் கூறிவிட்டு, தென்னாட்டில் நிலக்கரியும், பெரும் முதலாளிகளும் இல்லாததும்தான், தெற்கு அலட்சியப்படுத்தப்படுவதற்குரிய காரணங்களெனக் குழம்புகிறார்—குழப்புகிறார்!

தென்னாட்டில் தொழில்களை நிறுவுவதில் ஓரவஞ்சனையாக நடந்துகொண்டு வரும் இந்தியப் பேரரசை, நேர்மை உணர்வுடைய அரசாகக் காட்ட நிலக்கரி இல்லாமையையும் பெரும் முதலாளிகள் இல்லாமையையும், ஒரு புகலாகக் கொண்டு பேசக் கிளம்பி இருக்கிறார் அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார் என்றே எவரும் கொள்ளுவர்.

தென்னாட்டைத் தொழில் துறையில், இந்தியப் பேரரசு ஒதுக்கித்தள்ளி வந்திருப்பதற்கு, கிருஷ்ணமாச்சாரி புகலாகக் குறிப்பிடும் நிலக்கரியின்மையும், முதலாளிகள் இல்லாமையும், எவ்வளவு தூரம் பொருந்தக்கூடும் என்பதை பிறகு ஆராய்வோம். ஆனால், அமைச்சரின் கூற்று, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் தென்னாட்டிற்குக் கிடைக்க இருப்பது ஏமாற்றமே—பெரும் ஏமாற்றமே என்ற உண்மையை விளக்கமாக உணர்த்தக்கூடிய, சிறந்த திறவுகோலாக அமைந்திருக்கிறது.

நிலக்கரி என்றென்றும் கிடைக்கப்போவதுகிடையாது. பெரும் மூலதனம் படைத்த முதலாளிகளும் தென்னாட்டில் கிடையாது. அவர்களை ஒரே நாளில் உருவாக்கிவிடவும் மாட்டார்கள். எனவே, கனரகத் தொழில்களில் சிலவற்றையும், மின்சார உற்பத்திப் பெருக்கத்திற்கான ஏற்பாடுகளையும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் மேற்கொள்ள இந்தியப் பேரரசை, சென்னை காங்கிரஸ் அமைச்சர் குழு வலியுறுத்தவேண்டுமென்ற தமிழ் நாடு காங்கிரஸ் குழுவின் குற்றாலக் கோரிக்கையை, ஏட்டளவில், தித்திக்கும் தீந்தமிழில் கவி புனைந்து, மற்றொரு குற்றாலக் குறவஞ்சியாக இயற்றி, தமது தலைவர் கக்கன் அவர்களைக் கொண்டு, தமிழ் இல்லந்தோறும் பாடிவரச் செய்யவேண்டியதே இனி தமிழ்நாடு காங்கிரசிற்குள்ள பெரும் பணியாகும்!

வான்முட்டும் மாளிகைகள்

தென் அமெரிக்க 'பாணி'யில் கல்கத்தாவில் கட்டப்படும்

தென் அமெரிக்க முறையில், கல்கத்தா நகரின் பல பகுதிகளிலும் சுமார் 12 'வான்முட்டும் மாளிகைகள்' அமைக்கும் திட்டங்கள், நகரசபையின் அனுமதிக்காக இருக்கின்றனவாம்.

தென் அமெரிக்க—இந்திய நகரங்களின் வெட்ப தட்ப நிலைகளில் காணப்படும் ஒருமைப்பாடுதான் இந்த மாளிகைகள் அமைக்கும் எண்ணத்தை ஊக்குவிக்கின்றதாம்.

சுமார் 22 அடுக்குமாடிகளைக் கொண்டதாக இந்த 'வான்முட்டும் மாளிகை'கள் அமையுமாம்.

வேலை தேடித் தரும் நிறுவனங்கள் மூலம்!

வேலை பெற்றோர் விவரம்

இந்தியாவெங்கணுமுள்ள வேலை தேடித்தரும் நிறுவனங்கள் 1955 மே திங்களில் சுமார் 16,331 பேர்களுக்கு வேலை தேடித் தந்திருக்கிறதாம். இது 1953-ம் ஆண்டு மத்தியிலிருந்து வேறெப்போதும் இல்லாத அளவு அதிகமான எண்ணிக்கையாகும்.

அரசாங்க அலுவலகங்களிலிருந்து வேலைக்கு ஆள் கேட்பதில் 1953-ம் ஆண்டு இறுதிக்குப் பிறகு இருந்ததைக் காட்டிலும் இப்போதுதான் மிக அதிகமான ஆட்கள் கோரப்பட்டனராம்.

மாநில, மத்திய சர்க்கார் அலுவலகங்களிலிருந்து எடுக்கப்பட்டவர்களில் அதிகமான பேருக்கு வேலை கிடைத்துவருவதாகவும், அவர்களில் வேலையற்றிருப்போர் எண்ணிக்கை குறைந்துவருவதாகவும் கூறப்படுகிறது.

ஐந்து மாநிலங்கள்—குறிப்பாக ஐதராபாத், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்கள்—வேலை நிலைமை அபிவிருத்தியடைந்து வருவதாக அறிவித்திருக்கின்றனவாம்.

தட்டிக் கேட்போர் வேண்டும்

பிரான்சிற்கு ரஷ்ய கம்யூனிஸ்டு செயலாளர் எச்சரிக்கை

மாஸ்கோ, ஜூலை 5—

"தட்டிக் கேட்போர் எல்லோருக்கும் தேவைதான்; எங்களைக் காட்டிலும் பிரான்சுக்குத்தான் தட்டிக் கேட்போர் தேவை என நான் நினைக்கிறேன்; ஏனெனில், ஜெர்மனி, எங்களைக் காட்டிலும் உங்களைத்தான் அதிகம் அச்சுறுத்துகிறது; உங்களைப்

(4-ம் பக்கம் பார்க்க)

வீழ்ந்த விலை உயருகிறது!

உ. பி. கோதுமை

லக்னோ, ஜூலை 4—

இந்திய சர்க்காரின் தானிய விலைச் சரிவைத் தடுப்பது பற்றிய கொள்கையின் விளைவாக உத்தர பிரதேசத்திலுள்ள மார்க்கெட்டுகளில் கோதுமையின் விலை ஏறியிருப்பதாகத் தெரிகிறது.

கோதுமையின் விலையேற்றத்தையொட்டி உ. பி. மாநிலத்திலுள்ள சில சிறைக்கூட அதிகாரிகள், கைதிகளின் உணவுப் பொருளான கோதுமைக்காக, சர்க்கார் தானியக் கிடங்கை நாடுகிறார்களாம்.

தற்போதுள்ள நிலவரப்படி, உ. பி. மாநில மார்க்கெட்டுகளில், கோதுமையின் விலை மணங்கொன்றுக்கு ரூ. 10½ முதல் ரூ. 11 ஆக இருப்பதாகவும், சென்ற இரண்டு வாரங்களாக மாநில சர்க்காரும கோதுமைக் கொள்முதலை நிறுத்திக் கொண்டுள்ளதாகவும் தெரிகிறது.

சென்ற ஏப்ரல் திங்களில், உ. பி. மாநிலத்தில் கோதுமை விலை மணங்கு ரூ. 10க்கும் குறைவாக இருந்தபோது, சர்க்கார் 55,000 டன் கோதுமையைக் கொள்முதல் செய்து கிடங்கில் சேர்த்துள்ளது.

இந்த 55,000 டன் கோதுமையில், பின்னர் பீகார் மாநிலத்திற்கு 10,000 டன் கோதுமையை உ. பி. சர்க்கார் விநியோகம் செய்தது.

ரூ. 88 லட்சம் செலவில்!

மீன் விநியோகத் திட்டம் இரு மடங்காகிறது

திரு—கொச்சி மாநிலத்தில் தற்போதுள்ள மீன் விநியோகத் திட்டத்தை இரு மடங்காக உயர்த்துவதற்கு திரு—கொச்சி சர்க்கார் ரூ. 88 லட்சம் செலவில் புதிய மீன் பிடிப்புத் திட்டங்களை உருவாக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தத் திட்டத்தையொட்டி கொல்லம்—கன்னியாகுமரி கடற்கரையோரப் பகுதிகளில் 4 மீன் இலாகா நடுநிலையங்கள் திறக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

இத்திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களுள் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளப்படுமாம்.

கர்நாடகத்தை ஆண்ட மன்னர்கள்

9-ம் நூற்றாண்டுகால செப்புத் தகடுகள் விபரம் தருகின்றனவாம்

புதை பொருள் ஆராய்ச்சி இலாகாவினர் மைசூர் மாநிலத்தில் உள்ள தம்கூர் எனுமிடத்திலிருந்து ஒன்பது மைல் தொலைவில் உள்ள சிக்கராங்கி எனும் கிராமத்தில், 800-ம் ஆண்டுக் காலத்தியது எனக் கருதப்படும் செப்புத் தகடுகளாலான மூன்று தொகுப்பு 'தஸ்தாவேஜு'களைத் தோண்டி எடுத்திருக்கின்றனர்.

ஒவ்வொன்றும் 5 தகடுகள் கொண்ட இரு தொகுப்புகள் 'சங்கவாடி' எனும் மாநிலத்தை 726—800-ம் ஆண்டுகளுக்கிடையில் ஆண்டதாகக் கூறப்படும் சங்க மன்னனான 'ஸ்ரீ புருஷர்' என்பவரின் ஆட்சியைக் குறிப்பதாக இருக்கின்றனவாம்.

மூன்றாம் தொகுப்பு ஏழு தகடுகளைக் கொண்டிருக்கிறது; அதில் ராஷ்டிரகூட மன்னர்களைப் பற்றியும், பிரபுத்தவர்ஷ கோவிந்தா என்ற அந்த மரபு மன்னரைப் பற்றிய விபரங்களும் இருக்கின்றன

கிறிஸ்துவ சகாப்தத்தின் ஆரம்பக் கால நூற்றாண்டுகளில் கர்நாடகத்தை ஆண்டுவந்த ராஷ்டிரகூட, கங்கா வம்சத்து மன்னர்களைப் பற்றிய ஏராளமான தகவல்கள் அதில் இருக்கின்றனவாம்.

பழங்குடி மக்கள் 'தலைவர்'கள்

7 பேருக்குக் கடுந்தண்டனை

சர்க்கார் அதிகாரிகளைத் தாக்கியதாகக் குற்றச்சாட்டு

ஷில்லாங், ஜூலை 6—

கடந்த 1954 அக்டோபர் திங்களில், வடகிழக்கு எல்லைப் பகுதியில், சிங்மோரி எனுமிடத்தில் அசாம் இராணுவத்தினர், சர்க்கார் அதிகாரிகள் ஆகியோரைத் தாக்கியதாகக் கிராம 'கவுன்சில்' ஒன்றினால் குற்றஞ் சாட்டப்பட்ட அசாம் மலை வாழ் மக்களின் தலைவர்கள் என அழைக்கப்படும் ஏழு பேர்களுக்கு தினசோலி நீதி மன்றம் ஏழாண்டு சிறைத் தண்டனை முதல் மரண தண்டனை வரை தந்திருக்கிறது என்று தெரிய வருகிறது.

மத்திய சர்க்கார் ஊழியருக்கு

மலை வாச வசதி!

'படி' தர சர்க்கார் திட்டம்

மத்திய சர்க்காரின் ஒவ்வொரு ஊழியரும் ஏதாவது ஒரு மலைவாச இடத்திற்குச் சென்று விடுமுறையைக் கழிப்பதற்கு மத்திய சர்க்கார் சுகாதார இலாகா ஒரு திட்டம் வகுத்திருக்கிறது. மாதம் ரூ - 500-க்குக் குறைந்த சம்பளம் வாங்குவோருக்கு அதற்காக, 'படி' வழங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

இதனால் சர்க்காருக்கு ஆண்டுதோறும் ரூ. 20 முதல் 30 லட்சம் வரை செலவு ஏற்படுமாம் மத்திய சர்க்காரின் 50,000 ஊழியர்களுக்கு இந்தச் சலுகை கிடைக்கலாமாம்.

ஐந்தாண்டு திட்டத்தில் ஒரு ஏற்பாடோ?

நேருவின் ரஷ்யப் பயணம் முழுமையும் இரண்டு திரைப்படப் பாகங்களாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாயும், இவற்றுள் முதலாவது பாகம் வருகிற வெள்ளிக் கிழமையன்று இந்தியாவில் மொத்தம் 225 திரைப்படக் கொட்டகைகளில் திரையிடப்படும் என்றும், இது 20 நிமிட நேரம் ஓடும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

முதலாவது படத்தில் மாஸ்கோ விமான நிலையத்தை நேரு சென்றடைந்தபோது ரஷ்யத் தலைவர்களால் அவருக்கு அளிக்கப்பட்டவரவேற்பு, ஸ்டாலின்கிராடில் உள்ள இரும்புத் தொழிற்சாலையை நேரு பார்வையிட்டது ஆகிய காட்சிகள் அடங்கியுள்ளனவாம்.

இரண்டாவது படம் இத்திங்கள் 24-ந் தேதியன்று திரையிடப்படும் என்றும், நேரு கலந்துகொண்டு சொற்பொழிவாற்றியபொதுக் கூட்டங்கள், நேரு சுற்றுப்பயணத்தில் அடங்கிய மற்ற இடங்கள் ஆகியவற்றின் காட்சிகள் அடங்கியிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நெசவு ஆராய்ச்சிக் கழகம்

கோவையில் ஒன்று அமையும்

துணி நெசவு ஆராய்ச்சிக் கழகம் ஒன்று கோவையில் உருவாகக் கூடும் என்று கூறப்படுகிறது.

கோவை ஆலை முதலாளிகள் சங்கம், தன் உறுப்பினர்களிடமிருந்து இந்தக் கழகத்திற்கென ரூ 10 லட்சம் வசூலித்திருப்பதாயும், இந்திய சர்க்கார் ஒரு சிறு தொகையை இந்தக் கழகத்தின் மூலதனச் செலவிற்காகத் தருவார்கள் என்றும் கூறப்படுகிறது.

கழகம் அமைவதற்கான இடம் தேடப்பட்டுவிட்டதென்றும் தெரிகிறது.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம்

சென்னை சர்க்கார் யோசிக்கிறதாம்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், 'ஷெட்யூல்' வகுப்பினர், பழங்குடி மக்கள் ஆகியோரின் நலன் அபிவிருத்திக்கான வேலைத் திட்டங்கள் பரிசீலிக்கப்படுகின்றன.

ரூ. 11 கோடி செலவு மதிப்புள்ள பல வேலைத் திட்டங்களை சென்னை சர்க்கார் பரிசீலித்து வருகிறார்களாம்.

இத்தொகையில், ரூ. 3 கோடி மத்திய சர்க்காரிடமிருந்து கிடைக்கக்கூடும்.

மாணவர்களுக்கு இலவசக் கல்வி வசதிகள், உபகாரச் சம்பளங்கள், வீட்டு வசதிகள், மற்றும் மேலே குறிப்பிட்ட மக்களின் சமூகத் தடைகளை விலக்குவதற்கான விசேட வசதிகள் போன்றவை இத்திட்டத்தில் இடம்பெறும்.

இந்த ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் 400 வீடுகள் வீதம் கட்டவும் உத்தேசமுள்ளது. ஒவ்வொரு வீடும் ரூ. 500 - அல்லது 600 செலவில் கட்டப்படும்.

இவ்வீடுகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அனேகமாக இனாமாகத் தரப்படலாம்; அதிலும், பெரும்பாலும் சமுதாய நலத் திட்டப் பகுதிகளில் இவை வழங்கப்படுமாம்.

ஆசிரியருக்கு ரூ. 60-ம், பயிற்சி பெற்ற மெட்ரிகுலேட் ஆசிரியருக்கு ரூ. 75-ம், வேலையிலிருந்து வரும் ஒரு ஆசிரியர் தமது கல்வியின் தரத்தை மேலும் உயர்த்திக் கொண்டால், அதற்கு தகுந்த ஊதியமும் கொடுக்கப்பட்டால்தான், ஆசிரியர் துறையில், தகுதிபெற்றவர்கள் பணியாற்ற முன்வருவார்கள் என்று மத்திய கல்வி இலாகா செயலாளரான உமாயூன் கபீர் என்பவர் கல்வித் துறையில் அதிகக் கவனம் செலுத்தவேண்டியதின் அவசியம் குறித்துத் தாமாகவே தயாரித்துள்ள தகவல் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

இரண்டாம் திட்டத்தில் கல்வி அபிவிருத்தி

முதல் திட்டத்தைவிட ரூ. 350 கோடி அதிகமாக செலவிடப்படும்

புதுடில்லி, ஜூலை 4—

இந்திய சர்க்காரின் திட்டக் குழுவுடன் சம்மந்தப்பட்ட மற்றவர்கள் கலந்தாலோசித்ததின் விளைவாக முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைக் காட்டிலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கல்வித் துறையில் ரூ. 350 கோடி அதிகமாகச் செலவிடப்படலாம் என்று தெரியவருகிறது.

மத்திய கல்வி இலாகா, மத்திய சர்க்காரும்—மாநில சர்க்கார்களும் ரூ. 1,080 கோடி அதிகமாகச் செலவிட வேண்டுமென்று சிபாரிசு செய்திருந்தது; ஆனால் தற்போது சமூக சேவை உட்பட கல்வித் துறை முழுமையிலும் ரூ. 500 கோடிதான் முதல் திட்டத்தை விட அதிகமாகச் செலவிடப்படும் என்று கூறப்பட்டுள்ளது

6 முதல் 11 வயது வரையுள்ள சிறுவர்களில் 75 சதவிகிதத்தினருக்கு ஆரம்பக்கல்வி அளிப்பதென்பதே கல்வி இலாகாவின் திட்டத்தின் நோக்கம்; ஆனால், இப்போது தெரிவிக்கப்பட்டிருக்கிறபடி, இந்த எண்ணிக்கை குறைந்து, முன்னர் திட்டமிடப்பட்டிருந்த 75 சத விகிதத்தினரிலும் பாதி பேருக்குத்தான் கல்வி அளிக்கப்படுகிறது. எனினும் இப்போதைய திட்டப்படி இருக்கும் 15 சத விகித எண்ணிக்கையை விட, வருகிற 1956-க்குள் 11 - முதல் 14 வயது வரை உள்ள சிறுவர்களில் 30 சத விகிதத்தவர் பள்ளி செல்வர்.

இது தவிர, எல்லா ஆசிரியர்களும் ஊதிய உயர்வு பெறுவர் என்றும், பயிற்சி பெறாத ஆசிரியர் கூட ரூ. 50-க்கு மேல் மாதச் சம்பளம் பெறுவார் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

அத்துடன், நடுநிலைப் பள்ளிப் பயிற்சி பெறும் மாணவர்களின் தொகை 10 சத விகிதத்திலிருந்து 20 சத விகிதமாக உயருவதுடன், இதனையொட்டி, பல்கலைக் கழகப் படிப்புகளிலும் மாற்றங்கள் செய்யப்படுமென்றும் கூறப்பட்டுள்ளது.

'ஆரம்பக் கல்விக்கூடங்களில் பயிற்சி பெறாத ஆசிரியருக்கு மாத ஊதியம் ரூ 50 ஆகவும், மெட்ரிகுலேட் அல்லாத பயிற்சி பெற்ற

ரூ. 250 இலட்சம் மூலதனத்தில்....

ரூபாய் நோட்டுகள் உற்பத்தி காகித ஆலை

இந்திய சர்க்கார் திட்டம்

ரூ. 250 லட்சம் மூலதனமாகக் கொண்டு ரூபாய் நோட்டுகள், பாங்கி நோட்டுகள், மற்றும் பாதுகாப்பான அத்தாட்சிப் பத்திரங்கள் ஆகியவைகளின் உற்பத்திக்கென காகித ஆலை ஒன்று துவக்குவதற்கான தொழில் நுணுக்க விவரங்களை இந்திய சர்க்கார் தயாரித்துக் கொண்டிருக்கிறதாம்.

இந்த ஆலை, காகித உற்பத்தி செய்யும் 3 இயந்திரங்கள் கொண்டதாயிருக்குமெனவும், சர்க்கார் பாதுகாப்பான காகிதங்கள் ஆண்டுதோறும் 1,600 டன் உற்பத்தி செய்யுமென்றும் கூறப்படுகிறது.

தற்போதுள்ள தேவைப்படி இந்தியாவிற்கு, ஆண்டொன்றுக்கு ரூபாய் நோட்டுகள், பாங்கி நோட்டுகள் போன்றவை தயாரிக்க சுமார் 800 டன் காகிதம் தேவையாக இருக்கிறது. இது தவிர, தபால் பில்லைகள் தயாரிப்பதற்காக மட்டுமே ஆண்டொன்றுக்கு 200 டன் காகிதம் தேவைப்படுகிறதாம்.

இனிமேல் ரூபாய் நோட்டுகளுக்குத் தேவையான காகிதங்களின் அளவு அதிகமாகவே இருக்குமென்றும், அதை அனுசரித்துத்தான் இத்தொழிற்சாலையின் சக்தி அமைக்கப்பட்டுள்ளதென்றும் சொல்லப்படுகிறது.

இது தவிர, நாசிக் எனுமிடத்தில் உள்ள கரன்சி நோட்டுகள் உற்பத்தி செய்யும் இந்தியப் பாதுகாப்பு அச்சகத்தின் சக்தியையும் விரிவுபடுத்த இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளதென்றும், இத்தொழிற்சாலையில் ரூ. 15 லட்சம் செலவில் ஒரு புது இயந்திரம் நிறுவப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

தற்போது இப்படிப்பட்ட கரன்சி, பாங்கி ஆகிய நோட்டுகளுக்குத் தேவையான காகிதங்களையெல்லாம் பிரிட்டனிலிருந்துதான் இந்தியா இறக்குமதி செய்து வருகிறது.

லோகியாவை கேலி செய்கிறார் நரேந்திரதேவ்

காசி, ஜூலை 4—

"ஒருவர் எத்தனை பெரிய மனிதராயிருந்தாலும், இன்றைய இந்தியாவில் ஒரு புதுக்கட்சி ஆரம்பித்து வெற்றி பெறுவதென்பது சாத்தியமில்லை,"

என்று ம. சோ. கட்சித் தலைவர் ஆச்சாரியா நரேந்திர தேவ், காசியில் கூறியிருக்கிறாராம்.

சில உறுப்பினர்கள் கட்சியிலிருந்து வெளியேறினல்கூட கட்சி சீர்குலைந்துவிடாதென்றும், நாட்டின் ஜனநாயக வாழ்வில் அது எதிர்க்கட்சியாக இயங்கிக் கொண்டிருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டாராம்.

குஜராத்தில் கப்பல்துறை

புதியதாக உருவாகிறது

குஜராத்திலுள்ள கேம்பே எனுமிடத்தை மேற்குக் கடற்கரையின் ஒரு 'சிறிய கப்பல் துறை' இடமாக உருவாக்குவது பற்றி 'சர்வே' வேலைகளில் ஈடுபட்ட கப்பல் துறை நிபுணர்கள் குழு, தனது சர்வே வேலைகளை முடித்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

இந்தக் குழு, மேற்படிஇடத்தை சிறிய கப்பல் துறை இடமாக உருவாக்குவதற்குத் தேவையான சில குறிப்புகள், ஏற்றுமதி-இறக்குமதிக்கான சில விபரங்கள் முதலியவற்றைத் தயாரித்துள்ளதாகவும், அந்த இடத்தைச் சுற்றிலுமுள்ள கடல் ஆழத்தை சுமார் $1\frac{1}{2}$ மைல் நீளத்திற்குச் 'சர்வே' செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

கேம்பே, பெரும்பாலும் ஒரு சிறு கப்பல் துறையாக உருவாவதற்கான நிலைகள் யாவும் தங்களுக்கு நம்பிக்கையூட்டுவனவாக இருப்பதாக மேற்படி குழு அறிவித்திருக்கிறதாம்.

அங்குள்ள வர்த்தகர்களும், குடிமக்களும் 'கேம்பே'யை ஒரு சிறிய கப்பல் துறையாக உருவாக்குவதின் மூலம் உள்ள நன்மைகள் குறித்து மேற்படி குழுவினருடன் விவாதித்து அதனை வலியுறுத்தினர் என்று தெரிகிறது.

மனித ஒற்றுமையை விளக்கும் புகைப் படங்கள்

உலகெங்குமுள்ள புகைப்பட நிபுணர்கள் தயாரித்தவையும்—இனம், மதம், மொழி, கலாச்சாரம் ஆகிய துறைகளில் மக்களுக்கிடையே வேற்றுமைகள் இருப்பினும்—மக்களுக்கிடையே நிலவி வரும் பொது இணைப்பை எடுத்துக் காட்டுபவையுமான 200 புகைப் படங்கள் அடங்கிய கண்காட்சி ஒன்று வாஷிங்டனிலுள்ள கார்கோரான் கலைக்கூடத்தில் இம்மாதம் 2-ந் தேதி முதல் நடைபெற்றுவருகிறது.

"மனித குடும்பம்" என்று கூறப்படும் இத்தொகுப்புக் கண்காட்சியை பலர் பார்வையிட்டனர்; சமீபத்தில் டெலிவிஷன் மூலமும் பலர் இதனைக் கண்டனர்.

இம்மாதக் கடைசிவரையிலும் இங்கு நடைபெறப் போகும் இப்பொருட்காட்சியை ஐரோப்பாவுக்கும், பிறகு ஆசியாவுக்கும் எடுத்துச் செல்ல அமெரிக்க அரசாங்கச் செய்தி இலாகா ஏற்பாடு செய்து வருகிறது.

புதிய முறையில் 'புரதம்' உற்பத்தி

ஒரிசா மாநில சர்க்கார் மீன் இலாகாவினர் முயற்சி

ஒரிசா மாநில சர்க்கார் மீன் இலாகாவினர், மீனிலிருந்து சுத்தமான புரதப் பொருட்களைத் தயாரிக்கும் புதிய முறை ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இவ்விதம் தயாரிக்கப்படுகின்ற புரதப் பொருள் 85 சத விகித 'சுத்தத் தன்மை' உள்ளதாக இருக்கிறதாம்! அத்துடன், மனித வளர்ச்சிக்குத் தேவையான முக்கிய இரசாயனப் பொருட்களும், திராவகங்களும் போதுமான அளவுக்கு இந்தப் புரதப் பொருட்களில் கிடைக்கப் பெறுகின்றனவாம்.

விஞ்ஞானிகள் ஆராய்ச்சிப்படி, சுறா போன்ற மீன்களின் தசைகளில் மிகுதியான புரதப் பொருட்கள் இருக்கின்றனவாம்.

இவ்விதம் தயாரிக்கப்படுகிற இந்தப் புரதப் பொருட்களெல்லாம், உணவுப் பொருளாக மட்டும் உபயோகப்படுத்தப்படாமல், பிளாஸ்டிக் சாமான்கள், பெயிண்டுகள், தோல் போன்ற தொழில்களுக்கும் பயன்படுத்தப்படுவதாக கூறப்படுகிறது.

உத்திர பிரதேசத்தில் பிணக் குவியல்கள்!

காரணங்கள் பற்றி மந்திரி

உத்திர பிரதேசத்தில் கார்க்வால் மாவட்டத்தில் உள்ள ரூப்குந்த் எனுமிடத்தில் நூற்றுக்கணக்கான பிணங்கள் குவியல் குவியலாகக் கிடப்பதாக செய்தி ஒன்று வந்ததல்லவா?

இதுபற்றி உ. பி. காட்டு இலாகா துணை அமைச்சரான ஜகமோகன் சிங் நேஜி என்பவர், இந்தப் பிணக் குவியல்கள் அங்கு கிடப்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம் என்றும், அவற்றுள் ஒன்றுதான் ஓரளவு சரியாக இருக்கலாம் என்றும் கூறியிருக்கிறார்.

அதாவது, பண்டைக் காலத்தில் திபேத் வியாபாரிகள் கூட்டம் அந்த வழியாகச் சென்றிருக்கும் போது அவர்களனைவரும் பனிப் புயலால் பாதிக்கப்பட்டு பூமிக்குள் புதையுண்டு மாண்டிருக்கலாம் என்பது முதல் காரணமாக இருக்கலாம் என்றும், அப்படியில்லையானால், சீக்கியத் தளபதி ஒருவரின் தலைமையின் கீழ் திபேத்துக்குச் செல்ல இருந்த ஒரு 'கண்டுபிடிப்புக்' குழுவினரின் பிணக் குவியலாக இது இருக்கலாமென்றும், ஏனெனில், அவர்கள் அவ்வாறு சென்றிருந்தபோது, முன்னர் கூறியதுபோல ஏதாகிலும் பனிப்புயலோ அல்லது வேறெதுவும் நேரிட்டு பூமிக்குள் புதைக்கப்பட்டிருந்திருக்கலாம் என்றும், இந்தக் காரணங்கள்தான் தாம் நினைக்கிற இரண்டு காரணங்களாக இருக்கலாமென்றும் கூறுகிறார்

ஆயினும், பிணக்குவியல்களில் பெண்கள், சிறுவர், சிறுமியரின் உடல்களும் காணப்படுகின்றன என்றும், எனவே தாம் கூறிய இரண்டாவது காரணம் இதற்குப் பொருந்தி வரக்கூடியதாக இல்லையென்றும் கூறியிருக்கிறார்.

"எனினும் இத்தகைய பரிதாப சம்பவம் நிகழ்ந்த காலத்தையும், நிகழ்வதற்கான காரணத்தையும் பற்றிய விவரங்களை நவீன கால விஞ்ஞானிகள்தான் கண்டுபிடிக்க வேண்டும்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

தாம் கார்க்வால்—அல்மோரா பகுதிகளில் சென்றிருந்தபோது, 18,000 அடி கடல் மட்டத்தினின்றும் உயர்ந்த இடங்களில் கிடந்த பிணங்கள் யாவும் ரப்பரைப்போல் சுருண்டு கிடந்தன என்றும், சில நூற்றாண்டுகளாகியும் அவை அழிந்துவிடவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

"கடல் மட்டத்திலிருந்து 15,000 அடி உயரத்திலும் ரூப்குந்துவிற்கு சுமார் 2 அல்லது $2\frac{1}{2}$ கல் தொலைவில் உள்ளதுமான மற்றொரு இடமாகிய பாடர் நெக்கோனி எனுமிடத்திலும்இதுபோல நூற்றுக்கணக்கான பிணங்கள்; மண்டை ஓடுகள், கை கால் எலும்புகள், மற்றும் உடல் எலும்புகள் காணப்பட்டன" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

முன்னர் ஒரு காலத்தில், ஒரு அரசன், தனது பரிவாரங்களுடன், தன் தெய்வமான நந்த தேவிக்குப் பலியிட 4 கொம்புகள் கொண்ட ஒரு ஆட்டை தேடி அலைந்ததாகவும், அப்படிச் சென்று கொண்டிருந்தபோது, பனிப்புயல் வீசினதாகவும், அதன் விளைவாக அந்த அரசனும், பரிவாரங்களும் அப்படியே பூமிக்குள் புதையுண்டு போனார்கள் என்றும், இப்போது காணப்படுகிற பிணங்கள் அனைத்தும் மேற்படி அரசனுடையவும், அவனது பரிவாரங்களுடையவும் பிணங்களேயாகும் என்றும் அங்குள்ள மக்களிடை ஒரு 'குருட்டு நம்பிக்கை' நிலவுகிறதாம்!

1954—55-ல், இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மூலப் பொருள்கள் பெரும்பாலும் உற்பத்திப் பொருள்களாகத் தயாரிக்கப்படாத சரக்குகள் ஆகியவற்றின் மொத்த மதிப்பு ரூ. 118 38 கோடி; முழுக்கவோ அல்லது பெரும்பாலாகவோ தயாரிக்கப்பட்டு, இந்தியாவிலிருந்து அதே வருடத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்குகளின் மொத்த மதிப்பு ரூ. 250·64 கோடி.

'சு. மி.', 'தினமணி' செய்திக்கு மறுப்பு

நாகூர் தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். நசீர் எழுதுவதாவது:—

"நாகூர் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து தோழர் காத்தலிங்கம் என்பவர் விலகி காங்கிரசில் சேர்ந்தது பற்றி 4—7—55 வெளியூர் பதிப்பு 'சுதேசமித்திரன்', 'தினமணி' ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்துள்ள அறிக்கையில், சில உண்மைக்கு மாறான செய்திகள் காணப்படுகின்றன. மேற்படி தோழர் தற்போதைய செயற்குழு உறுப்பினரும் அல்ல — பிரபலஸ்தரும் அல்ல. 27—3—55-ல் நடைபெற்ற புதிய தி. மு. கழகச் செயற்குழு தேர்தலுக்குப் பின் அவர் சாதாரண உறுப்பினர் ஆவார்; தேர்தலுக்குப் பின், அவர் சொந்த அலுவல் காரணமாகக் கழகத்திலிருந்து விலகிக் கொள்வதாக விலகல் கடிதம் கொடுத்து, அதுவும் செயற் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

"தற்போது அவர் பல வேறு காரணங்களுக்காகக் காங்கிரசில் சேர்ந்திருக்கலாம்; ஆனால் உண்மைக்குப் புறம்பாக மேற்படி தோழர் 'பிரபல நிர்வாகி' என்றும், 'முக்கியஸ்தர்' என்றும், 'நண்பர்களோடு காங்கிரசில் சேர்ந்தார்' என்றும், யாரோ சில 'அனாமதேயர்'கள் அறிக்கைகள் வெளியிட்டிருக்கின்றனர். துரும்பைத் தூணாக்கிக் காட்டுவதுதான் அவர்கள் பரம்பரை குணமாகும்

"நகர காங்கிரஸ் அன்பர்கள் இத்தகைய செய்திக்குப் பொறுப்பானவர்களானால், அவர்களுக்கே இது அவமானமாகும்."

'கோயில் செல்வோர் சங்கம்'

மதுரை, ஜூலை 2—

'கோயில் செல்வோர் சங்கம்' என்ற பெயரில், மதுரையில் ஒரு அமைப்பு ஏற்பட்டிருக்கிறது.

கோயில்களில் நடைபெறும் வழிபாடுகள், அர்ச்சனைகள் ஆகியவை தமிழ் மொழியிலேயே நடைபெறச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவும், கோயிலுக்குச் செல்லும் 'பக்தர்'களுக்கு, வழிபாட்டிற்குத் தேவையான வசதிகள் செய்துதரவும், திருவிழாக் காலங்களில் அவ்வப்போது நடைபெறும் குறைபாடுகளை அதிகாரிகளுக்கு எடுத்துக்கூறி அவற்றை நிவர்த்திப்பதற்கும், கோயில்களில் மேற்கொள்ளவேண்டிய 'சீர்திருத்தங்'களை எடுத்துக் கூறி ஆவன செய்யவும், கோயிலுக்குச் செல்பவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் இச்சங்கம் முன்வர வேண்டுமென்பதே மேற்படி சங்கம் நிறுவப்பட்டதின் முக்கிய நோக்கங்களாம்.

இந்தச் சங்கத்திற்கு - திரு ஔவை-துரைசாமியார் தலைவராக உள்ளாராம். திரு நி. பி. சுந்தரமூர்த்தி துணைத் தலைவராகவும், திரு. க. சண்முகசுந்தரம், ஞானேந்திரன் ஆகியோர் செயலாளர்களாகவும், திரு. ஆ. சண்முகவேலன் பொருளாளராகவும், திரு. பி. பழனியப்பன், டி. ஏ. வி. நாதன், கூத்தப்பன், சாம்பசிவம், சண்முகம், திருநாவுக்கரசு ஆகியோர் செயற் குழுவினராகவும் உள்ளனராம்!

வைஜயந்தியின் நடனம்!

டாக்டர் சுகர்ணோ காண்பார்

இந்தோனேஷியாவின் தலைவர் டாக்டர் சுகர்ணோ இத்திங்கள் 15-ந் தேதி புதுடில்லிக்கு வருகை தரும்போது, 'ராஷ்டிரபதி பவனத்'தில் 'நடனவிருந்து' அளிக்குமாறு வைஜயந்திமாலாவை இந்திய சர்க்கார் அழைத்துள்ளனராம். அழைப்பை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார் எனத் தெரிகிறது.

தொழிற்சங்கங்கள் பற்றி முன்னாள் அமைச்சர் கிரி

'கூலி உயர்வு கேட்பது மட்டுமே வேலையல்ல' என்கிறார்

சென்னை பொதுக்கூட்டத்தில் விளக்கம்

சென்னை, ஜுலை 5—

"நிர்வாகத்தினரை எதிர்த்துப் போரிட—பேராசைக் கோரிக்கைகளை முன்வைக்க—எப்போதும் சம்பள உயர்வு கோர—இவைகளுக்காக மட்டும் தொழிற் சங்கங்கள் இல்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்; தொழிற் சங்கங்கள் நியாயமான கோரிக்கைகளை முன்வைப்பதின்மூலம், 'நிர்வாகத்தினர் தவறிழைக்கின்றனர்' என்பதை எடுத்துக் காட்ட வேண்டும்;

"நிர்வாகிகள் தங்களிடமுள்ள பண பலத்தால் தொழிற் சங்கங்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளாவிட்டால்கூட, தொழிலாளர்கள் தலை தாழ்ந்துபோய்விட்டு, வெற்றி பெறுவதற்காகக் காத்திருக்க வேண்டும்; அப்போது நல்ல பலன்களை தொழிலாளர்கள் நிச்சயம் பெறமுடியும்;

"வேலை நிறுத்தங்கள், 'வேலை நிறுத்தம் செய்ய வேண்டும்' என்பதற்காகவே துவங்கப்படக்கூடாது; வேலை நிறுத்தம், தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளைப் பெறுவதற்கான கடைசி ஆயுதமாகக் கொள்ளவேண்டும்;

"நாட்டில், தொழிற் சங்க இயக்கம், மரண எல்லைக்கு வந்துவிட்டது; இயக்கம், கொள்கையில்—சிந்தனையில்—வேலையில் எந்தவித முன்னேற்றத்தையும் பெறவில்லை; மாறாக, பின்னேக்கிச் சென்றுகொண்டிருக்கிறது;

"உருவான ஆக்கந்தரும் கொள்கைகள் பற்றியே தொழிற் சங்கங்கள் சிந்திக்க வேண்டும்; எல்லா நேரத்திலும், 'கூலி உயர்வு வேண்டும்' என்று கேட்டுக்கொண்டிருப்பதைக் காட்டிலும், தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு வழங்குவதற்கான வழிவகைகளை தொழில் நிர்வாகிகளுக்கும்—சர்க்காருக்கும் எடுத்துக் காட்ட தொழிற் சங்கங்கள் முன்வர வேண்டும்,"

—என்று, மத்திய அரசாங்க முன்னாள் தொழிலாளர் இலாகா மந்திரி வி. வி. கிரி சென்னைக் கூட்டமொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

'சிம்சன் குரூப்' தொழிலாளர் சங்கத்திற்கான புதிய கட்டிடத் திறப்பு விழாவில் பேசிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"நாட்டில் தொழிற் சங்கங்கள் சிதறி அழிந்துபடாமலிருப்பதற்குரிய ஒரே வழி, அவை ஜனநாயக ரீதியாக அமைக்கப்பட்டு இயங்க வேண்டுவதுதான்.

"பொதுவாக தொழிலாளர்களின் நடத்தை. கண்ணியம், தொழில் இவற்றை வளர்ப்பதற்காகத்தான் சங்கங்கள் இருக்கின்றன.

"கொள்கைகள் ஏதுமின்றி, தொழிற் சங்கங்கள் அமைவதினால் எந்தவித பலனுமில்லை.

"தொழிற் சங்கங்கள் வேண்டுமா வேண்டாமா என்பதை நிர்ணயிக்கும் காலம் வந்துவிட்டது; இந்தியாவில் உள்ள தொழிலாளர்களும், தொழிற்சங்க வாதிகளும், தங்கள் சங்கங்களை உறுதியான ஜனநாயக அடிப்படையில் அமைத்துக் கொள்வது பற்றி முடிவு செய்தாக வேண்டும். இதைச் செய்யாவிட்டால், தொழிற் சங்கங்களையே கலைத்து விடுவது நலம்.

"சங்கங்களைக் கலைத்து விட்டு, வேலைக்கு அமர்த்திக்கொள்வோரின் நல்லெண்ணத்தை தொழிலாளர்கள் நம்பிக்கிடக்கச் செய்யலாம்; இந்த இரண்டாவது காரியத்தைச் செய்ய அவர்கள் விரும்பவில்லையானால், தொழிற் சங்கங்கள் ஜனநாயக ரீதியாக, உறுதியான அடிப்படையில் அமைவதைத் தவிர வேறு மாற்றம் ஏதுமில்லை

"தொழிற் சங்கங்கள், நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராட தொழிலாளர்களின் அனுமதி பெற்றதாகவும், அதே நேரத்தில், தொழில் நிர்வாகிகளின் இன்னல்களைப் புரிந்துகொள்பவர்களாகவும் இருக்க வேண்டும்."

'அந்தரங்க சுத்தி'யுடன் அமெரிக்கா செல்கிறதாம்!

வாஷிங்டன், ஜுலை 6—

"நேச மனப்பான்மையில் தனது கட்சி விளக்கத்தை எடுத்துரைத்து பைசலுக்கு வழி காண்பதற்கான 'அந்தரங்க சுத்தி'யுடனேயே ஜினிவா 4 வல்லரசுகள் மாநாட்டிற்கு அமெரிக்கா செல்ல இருக்கிறது," என்று அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசனேவர் கூறியிருக்கிறார்

கழகக் கூட்டம்

★

சென்டங்காடு
பந்தடி திடலில்
9—7—55 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
ச. அன்பழகன்
தேனப்பன்
அருண்மொழி

கோவா கெடுபிடி

தந்தி தொடர்பு துண்டிப்பு

ராஜ்கோட், ஜுலை 6—

இந்திய பிரதேசத்திலுள்ள சௌராஷ்டிரத்துடன் இருந்து வந்த தந்தித் தொடர்பை, டையூவில் உள்ள போர்ச்சுகீசிய அதிகாரிகள் துண்டித்து விட்டதாகக் கூறப்படுகிறது அண்மையில் இந்திய சர்க்கார், போர்ச்சுகல் திட்டுச்களுடன் கொண்டிருந்த எல்லா தபால் வசதிகளையும் நிறுத்திவிட்ட பிறகு தந்தித் தொடர்பு ஒன்று மட்டும்தான் இருந்து வந்தது.

நேற்று மாலை 6 மணி முதல் இன்று காலை 6 மணி வரை அங்கு ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்ததாம். இரவுக் காலங்களில் கோவா கிளர்ச்சிக்காரர்கள் வெளியிலிருந்து வருவதைத் தடுக்கும் நோக்கத்துடனேயே இச்சட்டம் பிறப்பிக்கப்பட்டதாம்.

போர்ச்சுகீசிய அதிகாரிகளுக்கு உதவியாக, டையூவுக்கு, ஸ்பெயின் பிரேசில் ஆகிய இடங்களிலிருந்து தொண்டர்கள் வந்துள்ளனராம்.

கல்லூரி போதனு மொழிப் பிரச்சினை.........

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

மேலும் அவர் குறிப்பிட்டார்:— "ஒரே ஒரு மொழியைக் குறித்துத்தான் மத்திய அரசாங்கம் தற்சமயம் அக்கரை கொண்டிருக்கிறது; அது தேசிய மொழி எனவும் பேசப்பட்டு வருகிறது; அதை எவரும் திருத்தவில்லை; விருப்பம்தான் எண்ணத்தின் பிறப்பிடம்; நான் அரசியல் சட்டத்தைப் படித்தேன்; இந்தியை ஆட்சி மொழி என்றுதான், அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"தென்னிந்தியக் கல்வி முறையின் தனிச் சிறப்புகளில் ஒன்ருக இருப்பது என்னவென்ருல், வடநாட்டில் ஆங்கிலம் பரவி இருப்பதைக் காட்டிலும், தென்னுட்டில் மிகுதியாகப் பரவி இருப்பதேயாகும். பல நாடுகளில் பேசப்பட்டும், உலக மொழியாகவும் வளர்ந்துள்ள ஆங்கில மொழி நம்மால் விடப்பட்டுவிடுமானுல், அது பெரும் நஷ்டமாக முடியும் எனவே, ஆங்கில மொழியில் ஆற்றல் பெற்றிருப்பது நமது பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பெரும் இலாபமாகும். நான் இவ்வாறு கருதுவது, அவர்கள் உலக மாநாடுகளில் கலந்து கொள்ளும் வசதி பெறுகிருர்களே என்பதற்காக அல்ல; ஆனுல், பொதுவாக மதிப்பிடத் தகுந்த கண்டுபிடிப்புகளையும், அதிலும் குறிப்பாக மருத்துவ, விஞ்ஞானப் புத்தறிவையும், தாங்கி எழும் நூற்களைக் கற்பதற்கு நமது மாணவர்கள் ஆற்றல் பெறுகிருர்களே என்பதற்கே ஆகும்.

"காந்தியாரும்கூட, 'பிரிட்டிஷ் ஆட்சிமுறையைத்தான் எதிர்க்கிறேனே அல்லாது, அவர்களுடைய மொழியை அல்ல,' எனக் கூறியுள்ளார்."

சீனுவின் முதல் ஐந்தாண்டுத் திட்டம்

தொழில் உற்பத்தியை அதிகரிக்க உத்தேசம்

சீனுவின் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சீனுவின் தொழில் உற்பத்தியை 104.1 சதவிகிதம் அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் காங்கிரசில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சோவியத் ரஷ்யாவின் தேவையான உதவியைக்கொண்டு ஆக்க வேலைகளுக்கு அணுசக்தியைப் பயன்படுத்த சீனு முற்படும் என்று கூறப்படுகிறது.

சீனுவின் முதல் ஐந்தாண்டுத் திட்டம் வருகிற 1957-ம் ஆண்டுடன் முடிவடைகிறது.

மலிவானதல்லவாம்!

"சோவியத் ரஷ்யாவிலுள்ள அணு சக்தி நிலையம் உற்பத்தி செய்யும் மின்சாரம், இந்திய நீர்விசை மின்சாரத்தைவிட விலை குறைவானதல்ல" என்று, ரஷ்யா சென்று திரும்பிய இந்தியத் தூதுக் குழுத் தலைவர் குன்வார் கூறியிருக்கிருர்.

தொழில் வளர்ச்சிக்கு ம. பிரதேசத் திட்டம்

ரூ. 400 கோடி செலவிடப்படும்?

நாகபுரி, ஜுலை 6—

மத்தியப் பிரதேச மாநில சர்க்கார், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்காக ரூ 400 கோடி செலவில் தற்காலிகத் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளதாம்.

பெரிய தொழில்கள், சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றின் அபிவிருத்தியிலேயே இத்திட்டத்தில் முக்கிய கவனம் செலுத்தப்படுமாம்.

ம பி. மாநிலத்திலுள்ள பிலாய் எனுமிடத்தில் ரூ. 100 கோடி செலவில் ஒரு உருக்குத் தொழிற்சாலை நிர்மாணிப்பதே, மாநில தொழில் வளர்ச்சிக்கான 'பெரிய நடவடிக்கை' என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

3 சிமெண்ட் தொழிற்சாலைகள், மாங்கனீஸ், செயற்கைப் பட்டு, இரசாயன உரம் ஆகியவற்றை உற்பத்திச் செய்யும் தொழிற்சாலைகள் ஆகியவற்றை நிர்மாணிப்பதை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளதாம்.

இரண்டாம் திட்டமும் அப்படித்தானு?......

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

புறுவருகிலிருக்கும் பிம்ப்ரி பெனிசிலின் மருந்து உற்பத்திச்சாலை, சிந்திரி உர உற்பத்தித் தொழிற்சாலை, டெல்லியிலுள்ள டி.டி டி. தொழிற்சாலைமுதலியவை இப்போதிருப்பதைப்போல் இருமடங்கு என்றமுறையில் உற்பத்தியைப் பெருக்குவதற்கான வகையில் விரிவாக்கப்படவிருக்கின்றனவாம்.

இத்துடன், பெங்களூரில் உள்ள இயந்திர சாதன உற்பத்திச்சாலை, விசாகையில் உள்ள இந்துஸ்தான் கப்பல் கட்டும் தொழிற்சாலை ஆகியவையும் விரிவுபடுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறதாகத் தெரியவருகிறது.

'மந்திரி குமாரி'

மீண்டும் உலவ அனுமதி

சென்னை, ஜுலை 7—

தோழர் மு கருணநிதி எழுதிய 'மந்திரி குமாரி' என்ற படத்தை தற்காலிகமாகத் திரையிடலாம் என்று, சென்னை உயர்நீதி மன்றம் இடைக்கால உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது.

இந்தப் படம், கடந்த 1950-ம் ஆண்டிலேயே தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்பட்டு, 'திரையிடப்படலாம்' என்று உறுதிப் பத்திரமும் வழங்கப்பட்டது. ஆனுல் அடுத்த ஆண்டிலேயே சர்க்கார், மீண்டும் ஒரு உத்தரவு பிறப்பித்தது — அதாவது, அந்தப் படம் காட்டப்படுவதற்குக் கொடுக்கப்பட்ட உறுதி மொழிப் பத்திரம் 5 ஆண்டு காலத்திற்குத்தான் செல்லுபடியாகுமென்றும், அதன் பின்னர் மீண்டும் அந்தப் படத்தைத் தணிக்கை செய்ய அனுப்ப வேண்டும் என்றும் கூறப்பட்டது.

அதன்படி, 'மந்திரி குமாரி' படம் மீண்டும் தணிக்கையாளர்களிடம் தரப்பட்டபோது, அதில் சில இடங்களை வெட்டவேண்டும் என்றும், அப்படிச் செய்தால்தான் படம் தொடர்ந்து வெளியிட அனுமதிக்க முடியும் என்றும் தணிக்கையாளர்கள் கூறினர். இதனை எதிர்த்து, மேற்படி படத் தயாரிப்பாளர்களான 'மாடர்ன் தியேட்டர்ஸ்'காரர்கள், 'சர்க்காரின் உத்தரவு செல்லாது' என்று புகார்மனு செய்துகொண்டதின் பேரில், மேற்படி மனுவை விசாரித்த நீதிபதி இராஜகோபாலன் வழக்கு விசாரணையை ஒத்தி வைத்தார்.

ஆனுல், மீண்டும் நேற்று, 'மாடர்ன் தியேட்டர்'சாரிடமிருந்து, வந்த மனு ஒன்றில், மேற்படி வழக்கில் தீர்ப்புக் கூறப்படும் வரையிலும் 'மந்திரி குமாரி' படம் திரையிடப்படுவதற்கு அனுமதி கோரப்பட்டிருந்தது.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி இராஜகோபாலன் தற்காலிக உத்திரவு ஒன்று பிறப்பித்ததுடன், அந்தப் படத்திற்கு மீண்டும் உறுதிமொழிப் பத்திரம் கொடுக்க மறுத்ததின் காரணம் பற்றிய விளக்கம் கூறுவதற்குத் தணிக்கையாளர் குழுவிற்கு 4 வார கால அவகாசமும் கொடுத்துள்ளாராம்

உள்ளூர் நிர்வாகங்களுக்கு இந்திய சர்க்கார் கடன்

புதுடில்லி, ஜுலை 6—

ஸ்தல நிர்வாகங்களுக்கோ, அல்லது பல்வேறு மாநிலங்களிலுள்ள மற்ற சாலைவேலை 'அதாரிட்டி'களுக்கோ ரூ. 2 கோடி கடன் தர இந்திய சர்க்கார் அனுமதி அளித்திருக்கிறதாம். தற்போதுள்ள ரோடு—இரயில் — 'லெவல் கிராசிங்'குகளுக்குப் பதில் மேற்பாலமோ, அடிப்பாலமோ கட்டுவதற்காகும் செலவைச் சமாளிக்கவே இந்தக் கடன் வழங்கப்படுகிறதாம்.

இந்த மானியத் தொகை, நகரசபைகளுக்குக் கடன் வழங்க முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள பணத்திலிருந்தே வழங்கப்படுகிறதாம்.

சென்னை, மைசூர், திரு-கொச்சி, பம்பாய், பஞ்சாப், மே. வங்கம், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில், 'லெவல் கிராசிங்'குகளுக்குப் பதிலாகப் பாலங்கள்கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநிலத்தில் 2,000 குழாய் கிணறுகள்?

சென்னை, ஜுலை 6—

வருகிற ஆண்டில் ரூ. 50 லட்சம் செலவில் 2,000 குழாய்க் கிணறுகளை அமைக்க சென்னை மாநில சர்க்கார் திட்டம் வகுத்திருப்பதாகத் தெரிகிறது.

ஒவ்வொரு கிணறும் 10 ஏகர் நிலத்திற்குப் பாசன வசதியளிக்கக் கூடியதாக அமையும் என்றும், இது தவிர, இடைக்காலங்களில் பருத்தி, வேர்க்கடலை, புஞ்சைத் தானியங்கள் ஆகியவற்றைப் பயிர் செய்ய உதவும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சென்ற 3 ஆண்டு காலத்தில் ரூ. 40 லட்சம் செலவில் சுமார் 2,000 குழாய்க் கிணறுகள், பெரும்பாலும் தஞ்சை, தென்னுற்காடு, வட ஆற்காடு, இராமநாதபுரம், திருச்சி, மதுரை, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளனவென்றும் கூறப்படுகிறது.

போலி குறுக்கெழுத்துப் போட்டி நிறுவனம்

மூன்று நபர்களுக்கு கடுங்காவல் தண்டனை

சோவை, ஜுலை 5—

போலி குறுக்கெழுத்துப் போட்டி நடத்தி மக்களை ஏய்த்துப் பிழைத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட மூன்று நபர்களுக்கு கோவை முதல் வகுப்பு நீதிபதி மூன்று மாத கடுங்காவல் தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கியிருக்கிருர் என்று தெரிகிறது.

'அகில இந்திய குறுக்கெழுத்துப் போட்டி' என்ற பெயரில் 1952ம் ஆண்டு அக்டோபர்-ஜுலை திங்களில் போலி நிறுவனம் ஒன்றின் பெயரால் பெரும் அளவுக்கு மக்களை ஏமாற்றினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டனராம்.

பிரிவுபசாரம்

பம்பாய்—கொலாபா தி. மு. கிளைக் கழக செயற்குழு உறுப்பினர் தோழர் எஸ். எஸ். முத்து தாயகம் செல்லுவதை முன்னிட்டு, 3—7—55ல், ஆஸ்டோலிய ஓட்டலில், கழகச் சார்பில் தோழர் எஸ். கே ராஜு தலைமையில் தேநீர் விருந்து நடைபெற்றது. தோழர்கள் பலர் பாராட்டுரை வழங்கினர்

தட்டிக் கேட்போர்.........

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

புண்படுத்த நான் விரும்பவில்லை; ஆனுல், உங்களைக் காட்டிலும் நாங்கள் பலம் வாய்ந்தவர்கள் என்று நினைக்கிறேன்; நான் ஏதாவது வருத்தந் தரக்கூடிய வகையில் கூறியிருப்பின் அதற்காக வருந்துகிறேன்,"

என்று, அமெரிக்க சுதந்திர தின விழா விருந்தில் கலந்து கொண்ட சோவியத் கம்யூனிஸ்டு கட்சி செயலாளர் குருஷ்சேவ், பிரெஞ்சுத் தூதுவரான லூயி ஜோக்ஸ் என்பாரிடம் கூறியதாகத் தெரிய வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு; இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.